**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - 2022**

-----------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

-

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு**

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும் பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு “திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு” என்ற முறைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது.

**1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 99 ஆம் பந்தியின் பிரகாரம் காலப்பகுதியில் இனங்காணப்பட்ட சகல வருமானங்களும் செலவினங்களினதும் விடயங்கள் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்குரிய மொத்தம் ரூபா 93 மில்லியன் ஆன செலவினங்களுக்காக அட்டுறு செலவின ஒதுக்கங்கள் எற்படுத்தப்படாததால் ஆரம்ப கடன் கொடுத்தோர் மீதி அந்த அளவினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | அந்த பற்றுச் சீட்டுகளுக்கு பணம் செலுத்தப்பட்டதுடன் மிகுதி பற்றுச் சீட்டுகளுக்களின் அளவு 2022 நிதிக்கூற்றுக்களில் நிலை அறிக்கையில் கடன் கொடுத்தோர் ஆக கணக்கிடப்பட்டுள்ளது.. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது அச்சொத்து தொகுதிக்குரிய சகல ஆதனங்களும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் | காணிகள் மற்றும் கட்டிடங்களுக்கான அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கையைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வருவதுடன அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2021 ஆம் ஆண்டின் போது 05 நிலையங்களுக்குரிய ரூபா 46 மில்லியன் ஆன கட்டிடங்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டில் 03 நிலையங்களுக்குரிய ரூபா 242 மில்லியன் ஆன 02 கட்டிடங்கள் மற்றும் 03 காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிகூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பின்னர் ஏனைய காணிகள் மற்றும் கட்டிடங்களையும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 14 இன் 40 ஆம் பந்தியின் பிரகாரம் முக்கிய முகாமைத்துவ பணியாளர்களின் திரண்ட பணிக்கொடை வெளிக்காட்டப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் தலைவராக கடமையாற்றியதற்காக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 460,000 கொடுப்பனவுகள் நிதிகூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிகூற்றுக்களில் வெளிக்காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 27 ஆம் பந்தியின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் சபையிடம் காணப்பட்ட 61 காணிகளுடன் தொடர்புடைய 234.69 ஏக்கர் தொடர்பாக நிதிநிலை அறிக்கைகளில் நிதிகூற்றுக்களில் வெளிக்காட்டப்படாததுடன் சபைக்குச் சொந்தமான 06 ஏக்கர் 57.78 பேர்சசஸ் ஆன 06 கட்டிடங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிகூற்றுக்களில் வெளிக்காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | களஞ்சியசாலை மற்றும் சாரதிகள் விடுதியின் கட்டுமானத் திட்டங்களுக்காக ஒப்பந்ததாரரினால் மீளாய்வாண்டின் நீட்டிப்புச் செலவு (Prolongation cost), விலை முரண்கள் மற்றும் தாமதக் கட்டணமாக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 7.3 மில்லியன் பில்களுக்கு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் கடன் கொடுத்தோர் ஒதுக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிகூற்றுக்களில் வெளிக்காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் சரியாக வெளிக்காட்டப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012-2019 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட நடைமுறை வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூபா 520 மில்லியன் ஆன 10 திட்டங்களில் ரூபா 14 மில்லியன் கிரயமான 07 திட்டங்களுக்கான ஒதுக்கீடு கிடைக்காததால், ரூபா 159 மில்லியன் பெறுமதியான 03 செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்ட திகதியில் பூர்த்தி செய்யப்படாமையால் சபையினால் இடைநிறுத்தப்பட்டன. | நடைமுறை வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்ட தொடங்கப்பட்ட 07 செயற்திட்டங்களுக்கான திட்டங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்ட போதிலும், ஒப்பந்தப் பணிகளை ஆரம்பித்து நிர்மாணப் பணிகளை முடிப்பதற்கு மூலதன ஒதுக்கீடுகள் கோரப்பட்ட போதிலும் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாததால் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | நிர்மாணப் பணிகளை மீண்டும் தொடங்கி கட்டிடங்களை முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நடைமுறை வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்ட 2021 முதல் 2022 இற்கு இடைப்பட்ட வருடங்களில் | நடைமுறை வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்ட களஞ்சியசாலை மற்றும் | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிகள் முடிக்கப்பட்டு பாவனைக்கு எடுக்கப்பட்ட பணிகள் முடிக்கப்பட்ட 02 செயற்திட்டங்களுக்கான ரூபா 180 மில்லியன் கட்டிடக் கணக்கில் மூலதனமாக்கப்படவில்லை. மேலும் அதனுடன் தொடர்புடைய தேய்மானம் ரூபா 9 மில்லியன் நிதிகூற்றுக்களில் காட்டப்படாமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறையும் அதே அளவினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சாரதிகள் தங்கும் விடுதி மற்றும் பொல்கொல்ல பயிற்சி நிலையத்தை நவீனமயமாக்கும் திட்டங்கள் தொடர்பான இறுதி தொழில்நுட்ப அறிக்கைகள் (Completion Report) கிடைக்காத காரணத்தால், முடிவுற்ற வேலைகள் கணக்கிற்கு உரிய நிலுவைத் தொகை மாற்றப்படவில்லை என்பதுடன் கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளபடி, 2023 ஆம் ஆண்டில் முடிவுற்ற வேலைகள் கணக்கிற்கு மாற்றப்படல் மற்றும் தேய்மான சீராக்கங்கள் செய்யப்படும். சீராக்கங்கள் தொடர்பான நாளேட்டு குறிப்புகளை இத்துடன் சமர்ப்பிக்கிறேன். | |
| (இ) | நிதிகூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 74.7 மில்லியன் பெறுமதியான 12 காணிகளின் உரிமை உறுதிப்படுத்தப்படவில்லை. | காணி பெறுமதியில் காணப்பட்ட ஏனைய காணிகளும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் அனுபவிக்கப்பட்டு வருவதுடன், அந்த காணிகளின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட மூலதனமாக்கப்படக்கூடிய பெறுமதி கணக்கிடப்பட்டுள்ளன. இந்த நிரந்தர உரிமைகள் இல்லாத காணிகளின் நிரந்தர உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சொத்துக்கள் பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2014 - 2018 ஆம் ஆண்டுகளில் முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா 2.8 மில்லியன் ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் பட்டியலிடப்பட்ட | 2023 ஆம் ஆண்டில் பௌதீக சரிபார்ப்பு செய்யப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கம் செய்யப்படுவதற்கான | சொத்துக்கள் பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தற்காலிக கட்டுமானங்கள் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |
| (உ) | மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்களின் கொள்வளவிற்காக ரூபா 9.8 மில்லியன் பணமாக செலுத்தப்பட்டும் காசுப்பாய்ச்சல் கூற்றில் கொள்வனவுகள் ரூபா 52.8 மில்லியன் ஆக காட்டப்பட்டமையால் முதலீட்டு நடவடிக்கைகள் ரூபா 43 மில்லியன் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் கொள்வனவுகளில் முந்தைய ஆண்டு கொள்வனவுகளுக்காக 2022 ஆம் ஆண்டில் பணம் செலுத்தப்பட்ட பெறுமதி அடங்குகின்றது. மேலும், நடைமுறை வேலைகள் கணக்கில் 2022 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட கணக்கிற்கு மாற்றப்பட்ட மீதியும் அந்த ஆண்டின் கொள்வனவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் நடைபெற்று வரும் பணிகளுக்கு ரூபா 8.2 மில்லியன் பணமாக செலுத்தப்பட்டும், காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 0.5 மில்லியன் பெறுவனவுகளாக காட்டப்பட்டதால் முதலீட்டு நடவடிக்கைகள் ரூபா 8.7 மில்லியனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | நடைமுறை கட்டிட வேலைகள் மற்றும் நடைமுறை வேலைகள் ஏனைய சொத்துக்கள் கணக்கில் 2021 ஆம் ஆண்டின் இறுதி நிலுவைகள் மற்றும் 2022 ஆம் ஆண்டின் நிலுவைத் தொகைகளின் வேறுபாடுகள் சீராக்கப்படுவதன் மூலம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (எ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பணிகள் முடிக்கப்பட்டு பாவனைக்கு எடுக்கப்பட்ட இரண்டு நிர்மாண செயற்திட்டங்களுக்கான ரூபா 9 மில்லியன் ஆன கட்டிடம் மூலதனமாக்கப்படாது மீண்டெழும் செலவுகளாக அவ்வருடத்தில் பதிவளிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் வருடத்தில் இத் திருத்தங்கள் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிகூற்றுக்களைத் தயாரிக்கும் போது கணக்கு வகைப்பாடு சரியாக செய்யப்பட வேண்டும் |
| (ஏ) | இளைஞர் பரிசுப் பிரிவின் நடைமுறைக் கணக்கின் ரூபா 1.3 மில்லியன் ஆன மீதி நிதிக்கூற்றுக்களில் | தேசிய இளைஞர் பரிசுப் பிரிவின் நடைமுறைக் கணக்கின் மீதி 2023 ஆம் ஆண்டின் நிதிகூற்றுக்களில் | சபையின் பணிகள் செயற்பாட்டிலிருந்து பெறப்பட்ட நிதியம் சபையின் பொது |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்படவில்லை. | வெளிக்காட்டப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தில் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஐ) | 2022 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் வெளியேறிய 10 அதிகாரிகளுக்கு வழங்க வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவுகள் ரூபா 4.4 மில்லியன் மீளாய்வாண்டில் அட்டுறு செலவுகளாகக் காட்டப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் அப்பெறுமதி மீளாய்வாண்டின் அட்டுறு செலவாகக் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஒ) | 2021 ஆம் ஆண்டில் பதவி விலகிய 05 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 966,712 பணிக்கொடைகள் ஒதுக்கப்பட்டதுடன், 2022ஆம் ஆண்டில் இரண்டு அதிகாரிகளுக்கு சேவையிலிருந்து விலகிய பின்னரான காலப்பகுதிக்கு ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்கள் உட்பட சம்பளமாக ரூபா 265,231 வழங்கப்பட்டிருந்தன. 1999 ஆம் ஆண்டில் மற்றும் 2001 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து விலகிய ஐந்து உத்தியோகத்தர்களுக்காக ரூபா 1.3 மில்லியன் பணிக்கொடை உடனடியாக வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் சரியாக கணக்கிடப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஓ) | நிதி நிலைமை கூற்றில் ஏனைய பொறுப்புகளின் கீழ் வெளிநாட்டு அமைப்புக்களாக காட்டப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூபா 4.9 மில்லியன் ஆன 04 வெளி நிறுவனங்களிடமிருந்தான பெறுவனவுகள் | 2023 ஆம் ஆண்டில் சபையின் பணிப்பாளர் குழுவிற்கு இது பற்றிய விரிவான அறிக்கையொன்று வழங்கப்பட்டு அளித்த பிறகு, இயக்குநர்கள் குழுவின் பணிப்பாளர் குழுவின் அங்கீகாரத்துடன் | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படாமையால் அந்த கொடுக்கல் வாங்கல்களின் சரியான தன்மை, முழுமை மற்றும் இருப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு முடியவில்லை. | வருமானத்திற்கு எடுப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | | |
| 10,065,342 | 80,232,338 | 70,166,996 | 2023 ஆம் ஆண்டின் இறுதியில் வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் கம்பனி மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஆகியவற்றின் ஒன்றிணைந்த கணக்குகளைத் தயாரிக்கும் போது, இரு தரப்பினருக்கும் இடையிலான பரிவர்த்தனைகள் சரியான முறையில் இணக்கம் செய்யப்பவதால் எனவே இந்த நிலைமையை 2023 ஆம் ஆண்டின் இறுதியில் இந் நிலைமையைத் தீரப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டிய கடன் மீதியை கம்பனியின் தகவல்களுடன் பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 ஒன்றிணைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 98 சதவீத பங்கு உரித்துடைய வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனி 1981 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த | 2023 ஆம் ஆண்டு முதல் வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் கம்பனியுடன் ஒன்றிணைந்த கணக்குகளைத் தயாரிப்பதற்குத் | ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்காதிருந்ததுடன் கம்பனியால் 2018 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

### 1.5.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

**பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய மீதியில் உட்பட்ட 2000 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் அறவிடப்படாத மொத்தம் ரூபா 1.2 மில்லியன் ஆன மீதியொன்று அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2022 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய மீதியில் 3 மற்றும் 22 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், வசூலிக்கப்படாத ரூபா 1.2 மில்லியன் ஆன மீதியொன்று காணப்பட்டது. | அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு அல்லது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பழமையான ரூபா 1.8 மில்லியன் செலுத்த வேண்டிய வைப்புத் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது தவிர மொத்தம் ரூபா 16.4 மில்லியன் ஆன 05 வருடங்களுக்கும் மேற்பட்ட பல்வேறு கடன் கொடுத்தோர் , செலுத்தப்படாத ஊதியங்கள், செலுத்தப்படாத பிடிசாசு, செலுத்த வேண்டிய வைப்புத்தொகை மற்றும் சம்பள வைப்புத்தொகை நிலுவைகள் தீர்க்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில் குறிப்பிட்ட மீதிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய வைப்புத் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டிற்கும் வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மன்றத்தினால் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் நிதி பெறப்படுகின்ற ஆதாரங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யாது செலவுகளை மட்டுமே மதிப்பீடு செய்துள்ளது. | 2023 ஆம் ஆண்டிலிருந்து நிதி பெறப்படும் விதம் குறித்த விரிவான மதீப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 156 மற்றும் தாபனக் கோவையின் II ஆம் பிரிவு | ரூபா 10.9 மில்லியன் கிரயமான கோழித் தீவனம் பெறுகை நடவடிக்கையின் போது, பெறுகை சபையின் அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளை மீறி அங்கீகரிக்கப்பட்டிருந்தமை மற்றும் ஏனைய பண்ணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளை ஒப்பிடாமல் கவனக்குறைவாக இருந்ததாலும் ஏற்பட்ட அண்ணளவாக ரூபா 4.6 மில்லியன் இழப்பு தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கோழி தீவனம் கொள்முதல் செய்யும் பெறுகை பணிகள் தொடர்பாக கவனக்குறைவு இருப்பது குறித்து விசாரித்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய PS/SP/SB/21/2018 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமாக வதிவிட பாடநெறி நடாத்துவதற்காக பயிற்சி நிலையங்களில் போதியளவான வசதிகள் காணப்படும் போது, சமூக மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தனியார் நிறுவனமொன்றில் நடாததப்பட்டு அதற்காக | இத்திட்டத்திற்கு நிதியளிக்கும் தனியார் நிறுவனத்தின் வேண்டுகோளின் பேரில் திட்டம் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டதுடன் , கொரானா தொற்றுநோய் நிலைமையில் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தங்குமிடக் கட்டணம், உணவுக் கட்டணங்களாக ரூபா 24.2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | தொடங்கப்பட்டதால் ஒரே இடத்திலேயே நிகழ்ச்சிகளை நடாத்தத் தேவையான வசதிகள் செய்து தரப்பட்டமை, கொரோனா வைரஸ நிலைமை பரவாத விதத்தில் நிறுவனத்தின் தங்குமிடம், உணவு, மற்றும் உபசரிப்புகள் பெறப்பட்டமை என்பன மேற்கொள்ளப்பட்டன. | |
| (ஈ) | 2015 செப்தெம்பர் 25 ஆந் திகதிய SP/SB/07/15 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை | நிகழ்வுகள், மாநாடுகள் மற்றும் பயிலரங்குகளுக்கு குறைந்த விலையில் பெறக்கூடிய நிறுவனங்களை மட்டுமே பயன்படுத்துமாறு குறிப்பிடப்பட்டிருந்தும், அதற்கு இணங்காது பெறுகை செயன்முறைகளை பின்பற்றாமல் சமூக மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை தனியார் நிறுவனமொன்றின் மூலம் செயற்படுத்த மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | விலைமனுக்கள் கோரப்பட்டு டென்டர் அங்கீகாரம் பெறப்பட்டு நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2021 திசெம்பர் 21 ஆந் திகதிய 3/2021 `ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 04.02 இன் iii ஆம் பந்தி | உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்பாடு செய்யப்பட முடியாததுடன் இலங்கையின் சார்பாக ஒரு குறிப்பிட்ட உத்தியோகபூர்வ அரசாங்க பங்கேற்பு அவசியம் இல்லாவிட்டால் மேற்கொள்ளப்படக்கூடாத போதிலும் , உள்நாட்டு நிதியின் மூலம் செலவிடப்பட்டு மாநாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 1.8 மில்லியன் உள்நாட்டு நிதி செலவிடப்பட்டிருந்தது. | நிர்ணயிக்கப்பட்ட முறைகளின்படி காசோலை மூலம் பணம் செலுத்துவதற்கு அதிக நேரம் எடுக்கும் என்பதால், பணிப்பாளர் நாயகம் இவ்விமான சீட்டுக்களுக்கான பணத்தைக் கையால் செலுத்தி இருக்கைகளை முன்பதிவு செய்துள்ளார். பின்னர் அந்தத் தொகை நிறுவனத்தால் திருப்பி அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 255.7 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 249.2 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6.5 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கினிஹிரிய மல தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பில், அவசர கொள்வனவுகளாக விலை மனுக்கள் கோரப்பட்டு 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி வரை ரூபா 3.9 மில்லியன் தயாரிப்பு பணிகளுக்காக செலவிடப்பட்டது. | இந்த வழங்கல் அவசரகால கொள்வனவுகளாக கோரப்பட்டுள்ளது மற்றும் அனைத்து கொள்வனவு நடவடிக்கைகளும் பெறுகை நடைமுறையின்படி செய்யப்பட்டுள்ளன. அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளின் கீழ் பணம் செலுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் ஆரம்பிக்கும் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் திட்டங்கள் தயாரித்து சரியான மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்த வேண்டியிருந்த துடன் அரசாங்கத்தின் பணத்தை சிக்கனமான ரீதியில் பயன்படுத்துவதை நோக்காகக் கொண்டு விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 வரை, மன்றத்தினால் ஏனைய அரச நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 02 வாகனங்கள் | அமைச்சின் செயலாளரின் கோரிக்கைக்கு அமைவாக குறித்த வேன் தற்காலிகமாக அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. | முறையாக கையகப்படுத்துவத ற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையாக ஒப்படைக்கப்படுவதற்கு அல்லது கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மன்றத்திற்கு வேனை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மற்றைய வாகனம் மன்றத்தின் துணை நிறுவனமான வ/ப இளைஞர் சேவைகள் கம்பனிக்கு தற்காலிகமாக ஏனைய வாகனம் வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் மன்றத்திற்கு ஒதுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 46 என்பதுடன் அவற்றில் 24 வழக்குகள் அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பானவை, 2011 ஆம் ஆண்டு முதல் மற்றும் 2022 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மன்றத்தினால் ஒதுக்கப்பட்ட காணி வழக்குகள 04 ஆக இருந்தது. மொத்த வழக்குகளில் 09 வழக்குகள் 05 ஆண்டுகளுக்கு முந்தியவை என்பது நிதி அறிக்கைகள் மூலம் வெளிப்படுததப்பட்டிருந்தன. | ஒரு தரப்பாக மன்றம் சம்பந்தப்பட்ட 24 அடிப்படை உரிமைகள் வழக்குகள் உள்ளதுடன் அவற்றில் 17 வழக்குகள் 2019 ஆம் ஆண்டில் இடமாற்றங்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. | வழக்கு நடவடிக்கைகளை முடிப்பதில் நிர்வாகத்தின் கவனம் இருக்க வேண்டும். |
| (இ) | போதிய எண்ணிக்கையிலான பயிற்சியாளர்கள் இல்லாமை மற்றும் மதியுரை கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு போதியளவு தொகையொன்று இல்லாத காரணத்தால் 2022 ஆம் ஆண்டில் 13 மாவட்டங்களில் நடாத்தப்பட்ட 24 கற்கைநெறிகள் நிறுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம் தயாரித்தல் தொழிநுட்ப தேசிய டிப்ளோமா கற்கைநெறி 2022 திசெம்பர் 31 வரை அங்கீகரிக்கப்படவில்லை. | 2018.06.20 அன்று அங்கீகாரம் பெறப்பட்டதுடன் , அது அடுத்த 03 ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கான அங்கீகாரத்திறகு தேவையான நடவடிக்கைகள் நிலையப் பயிற்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பாடப் பதிவு, அங்கீகாரம், பயிற்றுனர்கள் ஆட்சேர்ப்பு ஆகியவை நாளதுவரையாக் கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஜப்பானில் வேலைவாய்ப்பை வழங்கும் நோக்கில் ஜப்பானிய மொழிப் பாடத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக 2022ஆம் ஆண்டு ரூபா 3.7 மில்லியன் பெறுமதியில் 25 மடிக்கணனிகள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அதற்கான பாடநெறி ஆரம்பிக்கப்படாத காரணத்தினால், மடிக்கணனிகள் மேற்கண்ட நோக்கத்துடன் தொடர்பில்லாத மன்றத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. | இந்த 25 வாங்கப்பட்ட மடிக்கணனிகளை படங்கலா பயிற்சி நிலையத்திற்கு அனுப்பிய பின்னர், உரிய பாடநெறி ஆரம்பிக்கப்படாத காரணத்தினால், மன்றத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டதுடன் , அந்தந்த பிரிவுகளின் இருப்பு புத்தகத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்யும்போது தேவையை கருத்தில் கொள்ள வேண்டியதுடன் அதற்கேற்ப அவை தொடர்புடைய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | லெவ்வெகொட பயிற்சி நிலையத்திற்காக ஹலிஎல பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட 24 ஏக்கர் 03 றூர்ட் 53 பேர்ச்சஸ் ஆன காணி அளவிலிருந்து 13 ஏக்கர் 03 றூர்ட் 50 பேர்ச்சஸ் வரைபடத்தின் பிரகாரம் பௌதீக ரீதியாக காணப்படாததுடன் , அந்த காணி பகுதிகள் அளவீடுகளும் செய்யப்பட்டு அவற்றின் அளவுகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இளைஞர் விவகாரங்கள், விளையாட்டு மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் கடிதம் இலக்கம் y/w/f/4 மற்றும் 1996.11.03 ஆம் திகதிய அவசரகால விதிகளின் கீழ், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் / துணைத் தலைவருக்கு கையளிக்கப்பட்ட கடிதத்தில் காணி அளவொன்று காணப்பட்டது. அந்த கையளிப்பின் படி ஹாலிஎல பிரதேசச் செயலாளரின் 10 ஏக்கர் 0 றூர்ட் 0 பேர்ச்சஸ் என்ற காணி மன்றத்தினால் பயன்படுத்தப்படுவதுடன் மீதமுள்ள காணி நீண்ட நாட்களாக மற்றவர்களுக்குச் | காணிப் பகுதிகளை அளந்து அவற்றின் அளவைத் தீர்த்து வைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சொந்தமாக இருந்ததுடன் காணியை பல சந்தர்ப்பங்களில் அளப்பதற்காக ஹாலிஎல பிரதேசச் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவை மன்றச் சட்டத்தின் பிரிவு 26 (1) மற்றும் (2) இன் படி, மன்றத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மன்றத்தின் சொந்த நிதியில் பேணப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்ட போதிலும், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இளைஞர் கழகங்கள் சட்டத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நிறுவப்பட்டிருந்தன. ரூபா 20.5 மில்லியன் நிதிச் சொத்துக்களைக் கொண்ட இச்சங்கங்களின் செயற்பாடுகளுக்கு மன்றத்தின் பணியாளர்கள் மற்றும் பௌதீக வளங்கள் பயன்படுத்தப்பட்டதுடன், நிதி அறிக்கைகள் மன்றத்தின் நிர்வாகத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | முறையான் திட்டத்தின் கீழ், இளைஞர் சேவை மன்றத்தின் விளையாட்டுப் பிரிவின் கீழ் கட்டுப்படுத்தப்படும் வளங்கள் வருமானம் ஈட்டும் திட்டங்களைச் செயல்படுத்தவும், வருமானம ஈட்டக்கூடிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் குறைக்கவும் உதவுகின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். | மன்றத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மன்றத்தின் சொந்த நிதியில் பேணப்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்றத்தின் பிரதான களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த ரூபா 3.5 மில்லியன் தொகையான 37 வகையான பொருட்கள் பிரதான களஞ்சியசாலையிலிருந்து | களஞ்சியத்தில் உள்ள பொருட்களின் வகைகளுக்கு தற்போது தனிநபர்களுக்கு நினைவூட்டல் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன்படி, முறையாக | பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிட மிருந்து அறவீடு செய்யப்பட்டு அமைப்பு முறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 05 முதல் 33 வருடங்கள் வரை பல்வேறு தனிநபர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு தற்காலிகமாக வழங்கப்படடிருந்ததுடன் அவற்றை மீண்டும் பிரதான களஞ்சியத்திற்கு கொண்டு செல்வதற்கும், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் இருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவீடு செய்வதற்கு மற்றும் பொருட்களை ஏற்றுக்கொள்வதற்கு அவ்வாறு வழங்கப்படாத பொருட்களுக்காக சம்பளத்திலிருந்து அறவீடு செய்வதற்கு மனிதவள முகாமைததுவ பிரிவுடன் இணைந்து செயற்பட்டு வருகிறது. மேலும் அரச நிறுவனங்களுக்கு அவ்வப்போது நிகழ்ச்சித்திட்டங்களின் போது நினைவூட்டல் மற்றும் எழுத்துப்பூர்வமாக அறிவிப்புகள் செய்யப்பட்டுள்ளன. | |
| (ஆ) | எராமினிய அழகு மற்றும் பண்ணை பயிற்சி நிலையத்தில் உடற்கட்டமைப்பு நிலையமொன்று அமைத்தல் மற்றும் உபகரணப் பெட்டிகள் வாங்குவதற்கு ரூபா 1.1 மில்லியன் செலவிடப்பட்டும் அந்நிலையம் செயற்படாமல் இருந்தது. | அழகு விடுதியில் பயிற்சி பெறுபவர்கள் மற்றும் இளைஞர் கழகங்களின் இளைஞர் யுவதிகளின் விளையாட்டுத் தேவைகளுக்காக இந்த உடற்கட்டமைப்பு நிலையம் அழகு விடுதியில் அமைக்கப்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. | உடற்கட்டமைப்பு நிலையத்தினை திறந்து உபகரணங்களின் திறமையான பயன்பாட்டை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டு அமைச்சரவை தீர்மானத்தின்படி நிலாவெளி பண்ணைக்காக 200 ஏக்கர் நிலம் வழங்கப்பட்ட போதிலும், அங்கு பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படாமல் 29.5 ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே சட்டத்தின் நோக்கமல்லாத பண்ணையொன்று பராமரிக்கப்பட்டு வந்தது. சாகுபடி மற்றும் வருமானம் இல்லாத 03 ஆண்டுகளில் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு செலவுகளுக்காக ரூபா 15.5 மில்லியனும் கட்டுமானத்திற்காக ரூபா 22.9 மில்லியனும், சட்டப்பூர்வ உரிமையைப் பெறுவதற்கான சட்ட | 2014 திசெம்பர் 20 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானம் இலக்கம் அமப/ 135/706/2774/17 மூலம் 200 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்ட போதிலும் சுற்றுலா அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான காணி இதுவரை எமக்கு கையளிக்கப்படவில்லை. நாட்டில் நிலத்தை ஆக்கிரமிக்கத் தயாராக இருக்கும் வெளியாட்கள் மற்றும் காட்டு விலங்குகளிடமிருந்து காணிகளைப் பாதுகாக்க கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால், | திறம்பட பயன்படுத்தக்கூடிய வகையில் அமைப்பு வடிவமைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக் ரூபா 652,500 உம் செலவிடப்பட்டது. அதுமட்டுமின்றி கால்நடை வளர்ப்பிற்காக ரூபா 5.2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது | பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டதன் காரணமாக 03 வருடங்களில் பாதுகாப்புச் செலவுகள் அதிகரித்தமை, நிலத்தின் சட்டப்பூர்வ உரிமையைப் பெறுவதற்கு அது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் ரூபா 652,500 செலவிட வேண்டியும் ஏற்பட்டது. | |
| (ஈ) | 1990 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க ஆதன சுவீகரிப்புச் சட்டத்தின் அவசர சட்ட விதிகளின் கீழ் மன்றத்திற்கு கையளிக்கப்பட்ட பலாங்கொடை பொலிஸ் பிரிவின் ஹல்தலமுல்ல பிரதேச செயலகப் பிரிவின் வல்ஹபுதென்ன பத்தனை வத்த எனும் பெயரில் 01 ஏக்கர் 03 றுர்ட் 30 பேர்ச்சஸ் ஆன காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடம் 2021 பெப்ரவரி 25 ஆம் திகதி ரூபா 7.6 மில்லியன் என மதிப்பிடப்பட்டாலும், தற்போது விளைவற்றுக் காணப்படுவதுடன் , காணியில் காணப்படும் கட்டிடம் முறையான பராமரிப்பு இல்லாத காரணத்தினால் இடிந்து விழும் அபாயத்தில் காணப்பட்டது. | வாலிபர் சங்க பிராந்திய சம்மேளன இளைஞர்கள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் கவனம் செலுத்தியுள்ளனர். | விளைவற்ற ஆதனங்கள் பராமரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு முதல், 13 நாட்களில் இருந்து 1 ½ வருட காலப்பகுதியில், மன்றத்தின் தலைவர் / பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 08 பேர் அவ்வப்போது | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரால் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர்/ பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்படுவதுடன், | அதிகாரி ஒருவர் பல பதவிகளில் பணியமர்த்தாமல் இருப்பதுடன், ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி |

நியமிக்கப்பட்டனர். மன்றத்தின் 02 பிரதான பதவிகளுக்காக பதில்பணி புரிதல் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலும் , 26 பிரதி மற்றும் உதவியாளர் பதவிகள் மற்றும் 24 தொழில்முறை பயிற்சி ஆலோசகர் (ஒப்பந்தம்) பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.
2016 ஆம் ஆண்டு முதல் பதில்பணி புரிதல், கடமை மேவுகை மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 121 அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அத்துடன் இளைஞர் சேவைகள் அதிகாரியான உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட 03 பதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

தற்போது நிரந்தர அடிப்படையில் தலைவர்/ பணிப்பாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக மற்றும் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு எதிர்காலத்தில் வெற்றிடங்கள் நிரப்பப்படும் வரை மேவுகை கடமைப்பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.